# ஆண்டறிக்கை
# 2012 - 2013

LLTL

லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட்

# லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட்

**உள்ளடக்கம்** **பக்கம்**


| | |
|---|---|
| நோக்கும் அரும்பணியும் | 03 |
| கூட்டாண்மைத் தோற்றப்பாடு | 04 |
| தவிசாளரின் செய்தி | 05 |
| பணிப்பாளர் சபை | |
| சிரேட்ட முகாமைத்துவம் | 06 |
| நிதிசார் முனையம்சங்கள் | 07 |
| பணிப்பாளர்களின் அறிக்கை | 8-11 |
| கூட்டாண்மை ஆளுகைக் கூற்று | 12 |
| கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 13-14 |
| நிதிசார் அறிக்கைகள் மீதான பணிப்பாளர்களின் பொறுப்புகள் | 15-16 |
| கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்றுகள் | |

## நோக்கும் அரும்பணியும்

### நோக்கு

- கொள்வனவு – வழங்கல் மற்றும் கருத்திட்டங்களுக்காக முன்மாதிரியான வசதிகளை வழங்குவதன் ஊடாக தேசிய பாதுகாப்பினைப் பலப்படுத்துதல்

### அரும்பணி

- வெளிவாரி இரகசியத்தன்மையையும் உள்ளக வெளிப்படைத் தன்மையையும் பேணி இலங்கை ஆயுதப்படையினர், பொலீசார் மற்றும் அரசாங்கத்துக்கு சொந்தமான ஏனைய நிறுவனங்களுக்கான வரையறுக்கப்பட்டதும் முலோபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததுமான இராணுவ உபகரணங்கள் மற்றும் சேவை வழங்களுக்கான வசதிகளை அளித்தல்.
- சுதேச பாதுகாப்புக் கைத்தொழிலின் ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திக்கு உதவுதலும் மேம்படுத்தலும்
- தேசிய பாதுகாப்பு தொடர்பில் தாக்கமேற்படுத்துகின்ற கருத்திட்டங்களை தொடங்குதல் / மேற்கொள்ளப் பொறுப்பேற்றல் / முகாமை செய்தல்

## கூட்டாண்மைத் தோற்றப்பாடுகள்

| | | |
|---|---|---|
| கம்பெனியின் பெயர் | : | லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட் |
| சட்டபூர்வ அந்தஸ்து | : | வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய கம்பெனி |
| பதிவுசெய்த அலுவலகம் | : | 4 - 205, பிளம்ஜசீஎச், பௌத்தாலோக மாவத்த, கொழும்பு -7 |
| கூட்டிணைத்த திகதி | : | 2006 செம்ரெம்பர் 04 (2010 செப்ரெம்பர் 01 இல் மீள்பதிவு செய்யப்பட்டது) |
| கம்பெனிப் பதிவிலக்கம் | : | N (PBS) 1331 |
| பணிப்பாளர் சபை | : | |

திரு. என். பெரேரா - தவிசாளர்

திரு. எல். ஆர். த சில்வா - பணிப்பாளர்

திரு. டப்ளியூ. ஏக்கநாயக்க - பணிப்பாளர் (2012.08.17இல் பதவி விலகினார்)

திரு. எஸ்.எம். பியதிஸ்ஸ - பணிப்பாளர் (2012.08.17 இல் நியமிக்கப்பட்டார்)

எல்.என்.த சில்வா சந்திரசேன - பணிப்பாளர் / கம்பெனி செயலாளர்

திரு. எஸ். சேனாரத்ன - பணிப்பாளர்

செயலாளர் : எல். என். த சில்வா சந்திரசேன

383, கோட்டே வீதி,

ராஜகிரிய

தொலைபேசி : 011 – 2868793

கணக்காய்வாளர்கள் : பி. ஆர். த சில்வா அன்ட் கம்பெனி

(பட்டயக் கணக்காய்வாளர்கள்)

22/ 4, விஜய குமாரணதுங்க மாவத்த,

கொழும்பு 05.

தொலைபேசி : 011 – 4510368 / 011 – 4510268

வங்கியாளர் : இலங்கை வங்கி

சுதந்திரச் சதுக்க கிளை

டொறிங்டன்

கொழும்பு 07.

தொலைபேசி : 011 – 2678073

## தவிசாளரின் செய்தி

2013 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட் கம்பெனியின் ஆண்டறிக்கையையும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களையும் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

2013 ஆம் ஆண்டுக்கான எமது பெறுபேறுகள் தொழில்முயற்சித் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியமை, பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரால் நெறிப்படுத்தப்பட்ட அணியின் அர்ப்பணிப்பு மற்றும் ஒழுக்கம் நிறைந்த கிரய மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவத்தை பிரதிபலிக்கின்றது. 2013 மார்ச் 31 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தேறிய வருமானமாக அமைந்த ரூபா. 133.1 இன் பேரில் ல.லொ.ரெ.லி. ரூபா. 17.4 மில்லியன் வரி விதிப்புக்கு முந்திய இலாபத்தைப் பதிவு செய்தது. இவ்விரு எண்ணிக்கைகளும் இதற்கு முன்னர் பதிவாகிய அதிகூடிய பெறுமானத்தை விஞ்சியதாக அமைகின்றது. வருமானத்தின் 90% வளர்ச்சியின் மீது இலாபம் 128% ஆல் அதிகரித்தது. பங்கொன்றுக்கான ஈட்டல் முந்திய வருடத்தைப் பார்க்கிலும் 200% ஆல் வளர்ச்சியடைந்திருந்தது. பாதுகாப்புப் படையினரிடமிருந்தும் பொலீசிடமிருந்தும் நீண்டகாலமாக வருமதியாக இருந்த கடன்தொகைகளின் ஒருபகுதியை 2013 ஆம் ஆண்டில் எம்மால் அறவிட இயலுமானபோதிலும், தடைகள் நிறைந்த இந்நிலைமை தொடர்ச்சியாக நிலவுவதோடு ல.லொ.ரெ.கம்பெனியின் எதிர்கால செயல்நுணுக்க முதலீடுகள்மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியும் உள்ளது. எமது எதிர்கால வாய்ப்புகளையும் சவால்களையும் நாங்கள் இனங்கண்டுள்ளதோடு அவை தொடர்பில் ஆக்கமுறையாக செயலாற்ற நாங்கள் மிகுந்த தயார்நிலையில் உள்ளோம்.

பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. ஜயந்த விக்ரமசிங்கவுக்கும் பதவியணிக்கும் அவர்களின் அர்ப்பணிப்புக்காக பணிப்பாளர் சபையின் எனது சகோதர உறுப்பினர்கள் சார்பாக எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கம்பெனியின் தாபக நோக்கங்களை ஈடேற்றிக்கொள்வதில் அவர்களின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு மீது நாங்கள் நம்பிக்கை வைத்துள்ளோம். எதிர்பார்த்த பெறுபேறுகளை ஈடேற்றிக்கொள்ள வழங்கிய ஒத்துழைப்புக்காக எனது சகோதர பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ளவும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கிறேன்.

நிமல் பெரேரா

தவிசாளர்

2013 செப்தெம்பர் 27

## பணிப்பாளர் சபை

திரு. நிமல் பெரேரா - தவிசாளர்

திருமதி. லெய்சா என். ஆர். த சில்வா சந்திரசேன – பணிப்பாளர் / கம்பெனிச் செயலாளர்

திரு. லலித் ஆர் த சில்வா

திரு. வசந்த ஏக்கநாயக்க (2012.08.17 இல் பதவி விலகினார்)

திரு. எஸ்.எம். பியதிஸ்ஸ (2012.08.17 இல் நியமிக்கப்பட்டார்)

திரு. சுதர்ஷன சேனாரத்ன

## சிரேட்ட முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| திரு. ஜயந்த விக்ரமசிங்க | - | பிரதம நிறைவேற்று அதிகாரி |
| திரு. நிசாந்த த சில்வா | - | கருத்திட்ட மற்றும் நெறிப்படுத்தல் தலைமை அதிகாரி |
| திரு. ஸ்ரீலால் மஹிந்தபால | - | நிதி மற்றும் கொள்வனவு உதவி தலைமை அதிகாரி |
| பொறி.யியலாளர் லலித் லியனகே | - | தகவல் தொழில்நுட்ப தலைமை அதிகாரி |
| திரு. தம்மிக்க பர்னாந்து | - | கொள்வனவு உதவிகள் மற்றும் வழங்கல் தலைமை அதிகாரி |
| பொறி.யியலாளர் உபுல் குனசேகர | - | கருத்திட்ட முகாமையாளர் |
| திரு. தமித்த ஜயசேகர | - | மனித வளங்கள் மற்றும் நிர்வாக முகாமையாளர் |
| திரு. சரத் பீரிஸ் | - | உள்ளக கணக்காய்வாளர் |

## நிதிசார் முனையம்சங்கள்

| **விபரங்கள்** | 2012/**13** | 2011/**12** | மாற்றம் % |
|---|---|---|---|
| வருமானம் | **133.1** | 69.97 | 90 |
| மொத்த இலாபம் | **102.16** | 69.46 | 47 |
| தொழிற்பாட்டு இலாபம் | **13.81** | 4.28 | 223 |
| வரிவிதிப்புக்கு முந்திய இலாபம் | **17.38** | 7.62 | 128 |
| வரிவிதிப்பு | **3.23** | 2.91 | 11 |
| வரிவிதிப்பிற்கு பிந்திய இலாபம் | **14.15** | 4.71 | 200 |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | **12.53** | 15.48 | -19 |
| நடைமுறைச் சொத்துக்கள் | **159.09** | 194.46 | -18 |
| மொத்தச் சொத்துக்கள் | **171.62** | 209.94 | -18 |
| மொத்த உரிமைப்பங்குகள் | **119.39** | 106.97 | 12 |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | **4.08** | 19.30 | -79 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | **48.14** | 83.67 | -42 |
| நிகர சொத்துக்கள் | **119.39** | 106.97 | 12 |

**வீதங்கள்**

| | | | |
|---|---|---|---|
| பங்கொன்றுக்கான ஈட்டல் (205 பங்குகள்) | **69,003** | 22,974 | 200 |
| பங்கொன்றுக்கான நிகர சொத்துக்கள் | **582,400** | 521,818 | 12 |
| பங்குலாபம் மீதான இலாபம் (%) | **11.85** | 4.40 | 169 |
| மொத்த சொத்துக்கள் மீதான இலாபம் (%) | **8.24** | 2.24 | 268 |
| மொத்த இலாப விகிதம் (%) | **76.76** | 99,28 | -23 |
| தொழிற்பாட்டு இலாப விகிதம் (%) | **10.38** | 6.12 | 70 |
| நிகர இலாப எல்லை (%) | **10.63** | 6.73 | 58 |
| நடைமுறை வீதம் (தடவைகள்) | **3.30** | 2.32 | 42 |

**முந்திய வருடத்திற்கான புள்ளிவிபரங்கள் சி.ந..தா. தொடர்பான இ.நி.அ. நியமங்களுக்கு அமைவாக மீளமைக்கப்பட்டு மீள்வகைப்படுத்தப்பட்டது.**

## பணிப்பாளர்களின் அறிக்கை

**2013 மார்ச் 31**இல் முடிவடைந்த நிதி ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளையும் சுயாதீனமான கணக்காய்வாளர்களின் அறிக்கையுடன் 6 வது ஆண்டறிக்கையை பணிப்பாளர் சபை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றது.

### ஆண்டுக்கான மீளாய்வு

மீளாய்வாண்டில் கம்பெனி ரூ.8.2 பில்லியன் பெறுமதியான கொள்வனவு – வழங்கலுக்காக வசதிகளை வழங்கி ரூ. 205.3 மில்லியன் நிர்வாகக் கட்டணங்களைப் பெற்றுக் கொண்டது.

சம்பந்தப்பட்ட ஆயுதப் படையினருக்காக ஒதுக்கப்பட்ட செலவுத் தலைப்புக்களின் பிரகாரம் இவ்வாண்டுக்காக நிர்வாகக் கட்டணயாக ரூ. 75.4 மில்லியனை கம்பெனி ஏற்றுக் கொண்டுள்ளது.

இக்காலப்பகுதிக்காக சீஆர்டி கருத்திட்ட நடவடிக்கைகள் இடம்பெறவில்லை

வருமானம் மற்றும் தேறிய இலாபமாக முறையே ரூ. 131.1 பில்லியன் மற்றும் ரூ.14.1 மில்லியனைப் பதிவுசெய்து 2013 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்காக கம்பெனி தனது தொழிற்பாடுகளில் ஒரேமாதிரியான வளர்ச்சியை அடைந்துள்ளது.

பங்கொன்றுக்கான வருமானம் 2012/2013 இல் ரூ. 69,003 ஆக அமைந்ததோடு அது முந்திய ஆண்டினைப் பாரக்கிலும் 200 % அதிகரிப்பாகும்.

முதற்றடவையாக கம்பெனி சி.ந.தா. தொடர்பிலான இ.நி.அ. நியமங்களுக்கு அமைவாக 2012 மார்ச் 31 முடிவடைந்த ஆண்டுக்கான நிதி அறிக்கைகளைத் தயாரித்தது. ஆண்டில் ரூ.69.9 மில்லியன் புரள்வினைப் பதிவுசெய்ய கம்பெனிக்கு இயலுமாயிற்று.. 2012 மார்ச் 31 வரையான காலப்பகுதிக்கும் அதனை உள்ளடக்கிய காலப்பகுதிகள் அனைத்திற்குமான நிதியறிக்கைகளை 2012 மார்ச் 31 வரை நடைமுறையில் இருந்த இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகவே ( இ.க.நி.) கம்பெனி தயாரித்துள்ளது. அதற்கிணங்க இ.நி.அ. நியமங்களைப் பிரயோகித்து கம்பெனி நிகழ்கால நிதிக்கூற்றுக்களில் சித்தரிக்கின்ற சூத்திர வழிமுறையின் அடிப்படையில் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுகளை கணிப்பீடு செய்துள்ளது.

## முதன்மைச் செயற்பாடுகள்

தேசிய பாதுகாப்பு நாட்டத்துடனான இராணுவம்சார் பண்டங்களுக்கான வசதிகளை வழங்குதல் 2012/2013 ஆம் ஆண்டிலும் கம்பெனியின் பிரதான நடவடிக்கையாக அமைந்தன. எவ்வாறாயினும் தேசத்தின் அபிவிருத்தியை நோக்கமாகக்கொண்ட மேலும்பல கருத்திட்டங்களை அடுத்துறும் ஆண்டுகளில் அமுலாக்க உத்தேசிக்கப்பட்டள்ளது.

## கூட்டாண்மை ஆளுகை

மூலோபாயக் குறிக்கோள்களை ஆக்குதல், தலைமைத்துவம் வழங்குதல் மற்றும் முகாமைத்துவத்தை மேற்பார்வை செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய கம்பெனியின் ஆளுகைக்கு கம்பெனியின் பணிப்பாளர் சபை பொறுப்பு வகிக்கின்றது.

## புரள்வு

2013 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானம் **ரூ. 133,102,466** ஆகும்.

**விபரமான வருமானக் கூற்று**

| நிதிசார் பொழிப்பு | 2012/13 | | 2011/12 |
|---|---|---|---|
| | | | |
| வருமானம் | **133,102,466** | | 69,969,634 |
| விற்பனைக் கிரயம் | **(30,939,078)** | | (504,915) |
| மொத்த இலாபம் | **102,163,388** | | 69,466,196 |
| பிற தொழிற்பாட்டு வருமானம் | **314,816** | | 1,477 |
| நிர்வாகச் செலவுகள் | **(88,663,936)** | | (65,183,566) |
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலான இலாபம் | **13,814,268** | | 4,282,630 |
| நிதிசார் கிரயம் | **(3,007,300)** | | (2,181,656) |
| நிதிசார் வருமானம் | **6,573,199** | | 5,521,403 |
| வரிக்கு முந்திய இலாபம் | **17,380,166** | | 7,622,377 |
| வரிவிதிப்பு | **(3,234,532)** | | (2,912,766) |
| வரிவிதிப்புக்குப் பிந்திய இலாபம் | **14,145,635** | | 4,709,611 |

*முந்திய வருடத்திற்கான புள்ளிவிபரங்கள் சி.ந.தா. தொடர்பான இ.க.அ. நியமங்களக்கு அமைவாக மீளமைக்கப்பட்டு மீள்வகைப்படுத்தப்பட்டது.*

## மூலதனச் செலவினம்

ஆண்டுக்குள் நிலையான சொத்துக்களைக் கொள்ளல் தொடர்பாக உறப்பட்ட மொத்த மூலதனச் செலவினம் முந்திய ஆண்டில் **ரூ. 13,627,124.84** உடன் சார்புரீதியாக இவ்வாண்டில் **ரூ. 4,367,817.92** ஆக அமைந்தது.

## ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி

கம்பெனியின் ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 11 இல் காட்டப்பட்டுள்ளன.

## ஒதுக்கங்கள்

ஆண்டிற்கான மூலதன மற்றும் வருமான ஒதுக்கங்களின் அசைவுகள், உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

## பங்கிலாபம்

ரூ.**10.4** ஐ பகிரக்கூடிய இலாபமாக கம்பெனி அறிவித்துள்ளது

## அறிக்கைசெய்த காலப்பகுதிக்குப் பிந்திய நிகழ்வுகள்

கணக்குகளில் வெளிப்படுத்தல்கோ சீராக்கல்களோ தேவைப்படுகின்ற நிலைமைகள் அறிக்கைசெய்த காலப்பகுதிக்குப் பின்னர் தோன்றவில்லை.

## பணிப்பாளர் சபைக் குழுக்கள்

பின்வரும் சபை உறுப்பினர்கள் கணக்காய்வுக் குழுவில் செயலாற்றுகின்றனர்.

1. திரு. எஸ்.எம்.பியதிஸ்ஸ த சில்வா (தவிசாளர்)
2. திரு. லலித் ஆர் த சில்வா
3. திரு. சுதர்ஷன சேனாரத்ன

## ஒப்பந்தங்களிலான பணிப்பாளர்களின் ஈடுபாடு

2012/2013 நிதியாண்டுக்காக ஒப்பந்தங்கள் தொடர்பில் பணிப்பாளர்களின் ஈடுபாடு நிலவவில்லை.

## பணிப்பாளர் கட்டணங்கள்

இவ்வாண்டில் செலுத்தப்பட்ட பணிப்பாளர் கட்டணம் ரூ. **1,370,000** ஆக அமைந்தது.

## பணிப்பாளர்கள் பங்குகளை வைத்திருத்தல்

2013 மார்ச் 31 இல் முடிவடைந்த காலப்பகுதியில் பணிப்பாளர்கள் கம்பெனியின் பங்குகளை வைத்திருக்கவில்லை

## கணக்காய்வாளர்கள்

நியமிக்கப்பட்ட காலப்பகுதி நிறைவடைந்த மற்றும் மீண்டும் நியமிக்கப்பட்ட பி. ஆர். த சில்வா அன்ட் கம்பெனியை (பட்டயக் கணக்காய்வாளர்கள்) கணக்காய்வாளர்களாக மீண்டும் நியமிக்கவும் அவர்களுக்கான ஊதியத்தை நிர்ணயிப்பதற்குமான அதிகாரத்தை பணிப்பாளர் சபைக்கு வழங்குவதற்கான ஒரு பிரேரணை வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பிரேரிக்கப்படும்.

கணக்காய்வாளர் பி. ஆர். த சில்வா அன்ட் கம்பெனிக்கு 2013 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான ஊதியமாக ரூ. **130,000/=** செலுத்தப்பட்டது.

பணிப்பாளர்கள் அறிந்தவகையில் கணக்காய்வாளர் கம்பெனியுடன் (ஒரு கணக்காய்வா ளராக அன்றி) மேலே குறிப்பிட்ட வெளிப்படுத்தல்களுக்குப் புறம்பாக எவ்விதமான தொடர்புகளையும் கொண்டிருப்பதில்லை. அத்துடன் கணக்காய்வாளருக்கு கம்பெனியுடன் எவ்விதமான ஈடுபாடும் கிடையாது.

## <u>நன்றி</u>

தமது வங்கியாளர்களிடமிருந்து, பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சிடமிருந்து மற்றம் அரச நிறுவனங்களிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பு மற்றும் உதவிகளுக்காக பணிப்பாளர்சபை தனது நேர்மையான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

அத்துடன் எம்மீது வைத்துள்ள தொடர்ச்சியான நம்பிக்கை,ஒத்தழைப்பு மற்றும் ஒத்தாசைக்காக பதவியணிக்கும் சேவைபெறுநர்களுக்கும் வழங்கலாளர்களுக்கும் பிற தொழில்முயற்சித் தரப்பினர்களுக்கும் பணிப்பாளர் சபையைச் சேர்நத எமது நேர்மையான பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். இடையறாத அனுசரணைக்காக பங்குதாரர்களுக்கும் பணிப்பாளர் சபையின் நன்றி உரித்தாகும்.

பணிப்பாளர் சபைக்காகவும், அதன் சார்பிலும்,

நிமல் பெரேரா

(தவிசாளர்)

## கூட்டாண்மை ஆளுகைக் கூற்று

கம்பெனி நிர்வாகத்திற்கு பணிப்பாளர்சபை பொறுப்புக்கூற வேண்டுமென்பதோடு பணிப்பாளர் சபையினை நியமிப்பதும் பொருத்தமான நிர்வாகக் கட்டமைப்பு நிலவுகின்றதென்பதை உறுதிப்படுத்துவதுமே பங்குடைமையாளர்களின் பொறுப்பாகும்.

லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட் கம்பெனியின் பணிப்பாளர் சபை தனது அனைத்துச் செயற்பாடுகளிலும் தொழில்சார் நம்பிக்கை மற்றும் உயர் தொழில்வாண்மைக்காக தம்மை அர்ப்பணித்துள்ளது. அத்தகைய அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாக, தாபனம்சார் நிர்வாகத்தின் உயர்ந்த தரங்களையும் சாதகமாக நடைமுறை களையும் விருத்தி செய்த பணிப்பாளர் சபை ஒத்துழைப்பு வழங்குகின்றது.

### பணிப்பாளர் சபை

கம்பெனியின் மூலோபாய நோக்கங்களை வகுத்தல், அவற்றை நடைமுறைப்படுத்துவதற் கான தலைமைத்துவம் அளித்தல், தொழில் முயற்சியின் முகாமைத்துவத்தை மேற்பார்வை செய்தல் மற்றும் பொதுதிறைசேரிக்கு (பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களம்) அறிக்கை செய்தல் என்பன பணிப்பாளர் சபையின் அடிப்படை பொறுப்புகளாகும்.

அத்துடன் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவான செயற்பாடுகள் மூலமாக பங்குடைமையாளர்கள் மற்றும் பங்கீடுபாட்டாளர்களுக்காக பெறுமதியை உருவாக்குதலும் நேர்மை, வெளிப்படைத்தன்மை, நியாயமான கொடுக்கல்-வாங்கல் மற்றும் வகைபொறுப்புக் கூற்றுக்கு நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கின்ற கலாச்சாரமொன்றை மேம்படுத்துதலும் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.

இக்காலப்பகுதியில் திரு. வசந்த ஏக்கநாயக்க பணிப்பாளர் சபையிலிருந்து இராஜினாமா செய்தார். பணிப்பாளர்சபை உறுப்பினராக செயலாற்றிய காலப்பகுதியில் ஆற்றிய சேவைக்காக பணிப்பாளர்சபை அவருக்கு நன்றி தெரிவிக்கின்றது. 2012 ஆகஸ்ற் 27 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரத்தக்கதாக திரு.எஸ். எம். பியதிஸ்ஸ பணிப்பாளராக நியமிக்கப்பட்டு பணிப்பாளராக பதவி வகித்து வருகிறார்.

### பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

பணிப்பாளர் சபைக்கூட்டம் மாதந்தோறும் நடைபெறும். அவசியமேற்படுமிடத்து விஷேட பணிப்பாளர் சபைக் கூட்டங்களும் நடத்தப்படும். பணிப்பாளர் சபை நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டதாக அமைவதோடு கம்பெனியின் தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாடு மீது தாக்கமேற்படுகின்ற சுயாதீனமான தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆற்றல் நிலவுகின்றது.

மீளாய்வு செய்யப்படுகின்ற ஆண்டில் கம்பெனி பதினொரு பணிப்பாளர் சபைக் கூட்டங்களை நடத்தியது.

## கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

கம்பெனியின் கணக்காய்வுக்குழு நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்களை அதாவது 2012 ஆகஸ் மாதத்தில் இளைப்பாறும்வரை வசந்த ஏக்கநாயக்க (தவிசாளர்,) லலித் ஆர் த சில்வா மற்றும் சுதர்ஷன சேனாரத்த ஆகியோரை உள்ளடக்கியதாக அமைந்தது. 2012 ஆகஸ்ற் 17 ஆம் திகதி முதல் திரு.எஸ். எம். பியதிஸ்ஸ நியமிக்கப்பட்டார். கணக்காய்வுக்குழுவின் பிரதான கடமைகளும் பொறுப்புக்களும் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

அ) இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கம்பெனியின் நிதிக்கூற்றுகளைத் தயாரித்தல், சமர்ப்பித்தல் மற்றும் போதுமான அளவில் வெளிப்படுத்துதலை உள்ளிட்ட கம்பெனியின் நிதியறிக்கைகள் மற்றும் நிதியறிக்கையிடல் செயற்பாட்டின் தரம் மற்றும் நேர்மை பற்றிய மேற்பார்வைப் பொறுப்பினை ஈடேற்றுதல்

ஆ) 2007 இன் 07 ஆம் இலக்கமுடைய கம்பெனிகள் சட்டத்தினதும் சம்பந்தப்பட்ட நிதியறிக்கையிடல் சார்ந்த ஒழுக்கவிதிகளில் நிதி அறிக்கையிடல் மற்றும் தகவல் அவசியப்பாடுகளுடன் கம்பெனியின் அமைந்தொழுகல் பற்றிய மேற்பார்வை பொறுப்பினை ஈடேற்றுதல்

இ) இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அவசியப்பாடுகளைப் பூர்த்தி செய்ய கம்பெனி யின் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் அபாயநேர்வு முகாமைத்துவம் போதுமான தென்பதை உறுதிசெய்யும் பொருட்டு உள்ள செயற்பாடுகளின் மேற்பார்வை தொடர் பிலான பொறுப்பினை ஈடேற்றுதல் மற்றும் சட்டமுறையான அத்துடன் நியதிச்சட்ட முறையான தேவைப்பாடுகளுக்கு கம்பெனி அமைந்தொழுகின்றதென்பதை உறுதிப் படுத்தல்.

ஈ) கம்பெனியின் வெளிவாரி கணக்காய்வாளர்களின் சுயாதீனத்தன்மையையும் செயலாற்று கையையும் மதிப்பீடு செய்தல்.

உ) வெளிவாரி கணக்காய்வாளர்களை நியமித்தல், மீள் நியமனம் செய்தல் மற்றும் உசிதமான சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அவர்களை நீக்குதல் தொடர்பான பணிப்பாளர் சபைக்கு விதப்புரை செய்தல்

ஊ) நியதிச்சட்டமுறையான கணக்காய்வு நீங்கலாக கம்பெனிக்காக வெளிவாரி கணக்காய் வாளர்கள் பொறுப்பேற்கப்படுகின்ற ஏதேனும் பணியின் சார்புத்தன்மையை (உசிதமானதெனில்) பரிசீலனை செய்தல் மற்றும்

எ) வெளிவாரி கணக்காய்வாளர்களின் ஊதியத்தையும் ஈடுபடுத்துவதற்கான விதிமுறை களையும் அங்கீகரித்தல்.

.பிரதம நிறைவேற்று அதிகாரியையும் கொள்வனவு வழங்கல் வசதிகள் மற்றும் நிதிப் பிரிவுத் தலைமையதிகாரிகளையும் கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு கணக்காய்வுக் குழு அழைப்பு விடுத்த போதிலும் அவர்களில் எவரையேனும் கூட்டங்களிலிருந்து விலகிச் செல்லுமாறு வேண்டுகோள் விடுப்பதற்கான உரிமையைக் குழு தன்னகத்தே வைத்துக்கொண்டது.

மீளாய்வு செய்யப்படுகின்ற நிதியாண்டில் கணக்காய்வுக்குழு ஏனைய விடயங்களுக் கிடையில் பின்வரும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டது.

- கணக்காய்வு செய்யப்படாத மாதாந்த நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு
- ஆண்டுக்காக கணக்காய்வு செய்யப்பட்ட நிதியறிக்கைகளின் மீளாய்வு
- வெளிவாரி கணக்காய்வாளர்களால் விநியோகிக்கப்பட்ட முகாமைத்துவக் கடிதத்தின் மீளாய்வு மற்றும் முகாமைத்துவத்தின் தொடர் நடவடிக்கை செயற் பாடுகளின் மேற்பார்வை
- கம்பெனியிடமிருந்தும் அதன் முகாமைத்துவத்திடமிருந்தும் அவர்கள் சுயாதீனமாக உள்ளார்களென்பதற்கான வெளிவாரி கணக்காய்வாளர்களுடனான உரை யாடல்கள்
- நியதிச்சட்டமுறையாக அறிக்கையிடல் மற்றும் கொடுப்பனவுத் தேவைப்பாடுகளுடன் அமைந்தொழுகல் அறிக்கையிடல் மீளாய்வு.
- வெளிவாரி கணக்காய்வின் செயல்விளைவு பற்றிக் குழு மீளாய்வு செய்ததோடு வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பங்குதாரர்களின் அங்கீகாரம் கிடைப்பதற்கு கட்டுப் பட்டதாக பீ. ஆர். த சில்வா பட்டயக் கணக்காய்வாளர்களை கம்பெனியினை வெளிவாரிக் கணக்காய்வாளர்களாக அடுத்துறும் ஆண்டுக்காக மீண்டும் நியமிக்க பணிப்பாளர்சபை விதப்புரை செய்தது.

## நிதிசார் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

நிதிசார் கூற்றுக்கள் தொடர்பிலான பணிப்பாளர்களின் பொறுப்பு பின்வரும் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. 2007 இன் 7 ஆம் இலக்கமுடைய கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பபாடு களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வாளர்களின் பொறுப்பு கணக்காய்வாளர்களின் அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது.

கம்பெனியின் நிதிநிலைமை பற்றிய உண்மையாதும் நியாயமானதுமான அபிப்பிராயமொன்றை முன்வைக்கின்ற நிதிக்கூற்றுக்கள் பின்வரும் கூற்றுக்களை உள்ளடக்குகின்றன.

(அ) 2013 மார்ச் 31 ஆந் திகதியில் ரூ 19,977,022.68 ஆக அமைந்த கடன்படுநர்களின் நிர்வாகக் கட்டணங்கள் நேரடியாகவே உறுதிப்படுத்தப்படவில்லை என்ற விடயம் தவிர நிதியாண்டின் இறுதியில் நிதிநிலைமை பற்றிய கூற்று.

(ஆ) 2013 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று.

(இ) 2013 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று.

(ஈ) 2013 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்வுக் கூற்று.

2012 மார்ச 31 வரை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ,க.நி) நடைமுறையில் உள்ளமையால், 2012 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் ஒப்பீட்டுரீதியான காலப்பகுதியிலான தரவுகளுடன் 2013 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான மேற்படி நிதிக்கூற்றுகள், கம்பெனியால் முதல்த்தடவையாக சிறிய மற்றும் நடுத்தர தாபனங்களுக்கான இலங்கை நிதிசார் அறிக்கையிடலுக்கான நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டன.

அ. தொடர்ச்சியான வகையில் தெரிவுசெய்தும் பிரதியீடு செய்யப்பட்டும் உள்ள பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏதேனும் பொருண்மையான தவிர்த்தல் இருப்பின் அதனை வெளிப்படுத்தியும் விபரித்தும், அத்துடன்,

ஆ. இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் அமைந்தொழுகி, அத்துடன்,

இ. கொடுக்கல் - வாங்கல்களின் தன்மை மற்றும் சாரத்தை சரியான வகையில் பிரதி பலிக்கத்தக்கதாக நியாயமானதும் விவேகம் கொண்டதுமான தீர்மானங்களையும் மதிப்பீடுகளையும் மேற்கொண்டும், அத்துடன்

ஈ. கம்பெனிகள் சட்.டத்தின் பிரகாரம் அவசியமான தகவல்களை வழங்கியுமே நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை பணிப்பாளர்கள் உறுதிசெய்யவேண்டியது அவசியமானதாகும்.

அத்துடன் இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் நடப்புத் தொழில்முயற்சி அடிப்படை பதிலீடு செய்யப்படுவதை நியாயப்படுத்தி நெறிப்படுத்தலை தொடர்ச்சியாக பேணிவர அவசியமான வளங்களைக் கம்பெனி கொண்டுள்ளதென பணிப்பாளர்கள் உத்தரவாதம் அளிக்க வேண்டியதும் அவசியமாகும்.

மேலும் கம்பெனியின் நிதி நிலைமையை நியாயமான திட்பநுட்பத் தன்மையுடன் வெளிக்கொணரும் பொருட்டு போதியளவு கணக்கறிக்கைகளை கம்பெனி பேணி வருகின்ற தென்பதை உறுதிசெய்ய வேண்டியதும் பணிப்பாளர்களின் பொறுப்பாகும்.

அதற்கு மேலதிகமாக மோசடிகளையும் பிற முறைகேடுகளையும் தடுத்தல் மற்றும் கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் உசிதமான உள்ளகக் கட்டுப்பாட்டு வழிமுறைகளைத் தாபிப்பதன் ஊடாக கம்பெனியின் சொத்துக்களை பாதுகாத்துக் கொள்வதற்கான நியாயமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பாகவும் பணிப்பாளர்கள் பொறுப்பு வகிக்க வேண்டும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கவும் கணக்காய்வாளர்களுக்குத் தமது கணக்காய்வு அபிப்பிராயத்தை முன்வைக்கவும் ஆற்றல் பெற்றுக் கொடுக்குமென அவர்கள் கருதுகின்ற எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவும் எந்தவொரு விசாரணையையும் மேற் கொள்ளவும் இயலுமான எல்லாவிதமான ஒத்துழைப்பினையும் பணிப்பாளர்கள் வழங்க வேண்டும்.

இக்கூற்றின் காட்டப்பட்டுள்ளவாறு தமது பொறுப்பு உரியவகையில் ஈடேற்றப்பட்டுள்ள தென்பது பணிப்பாளர்களின் அபிப்பிராயம் ஆகும்.

**இசைவு அறிக்கை**

தனது உச்சமட்ட அறிவுக்கெட்டியவரை கம்பெனியால் செலுத்தப்பட வேண்டிய அனைத்து விதமான வரிகள், சுங்கத்தீர்வைகள் மற்றும் வருமானவரி கம்பெனியின் அனைத்து ஊழியர்களுக்காகவும் சம்பந்தப்பட்டதாக செலுத்தப்பட வேண்டிய அனைத்துவிதமான பங்களிப்புத் தொகைகள், வருமானவரி, வரிகள் மற்றும் ஐந்தொகைத் தேதியில் கம்பெனியால் செலுத்தப்பட வேண்டியதும் செலுத்தவேண்டி இருந்ததுமான ஏனைய அனைத்துவிதமான நியதிச்சட்ட முறையான கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டுள்ளதை பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகிறார்கள்.

**பி. ஆர். த சில்வா அன்ட் கம்பெனி**

**பட்டயக் கணக்காய்வாளர்கள்** *பிரத்தியேகமானதும் இரகசியமானதுமாகும்.*

**லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட்டின் அங்கத்தவர்களுக்காக சமர்ப்பிக்கப்படுகின்ற சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை**

## 1. நிதிக்கூற்றுக்கள் பற்றிய அறிக்கை

2013 மார்ச் 31 ஆந் தேதியிலான நிதிநிலைமை பற்றிய கூற்று மற்றும் 2013 மார்ச் 31 ஆந் தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விபரமான வருமாக் கூற்று, உரிமைப் பங்கிலான மாற்றம் பற்றிய கூற்று மற்றும் காசுப் பாய்வுக்கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் பக்கம் (01) முதல் (18) வரை விபரிக்கப்பட்டுள்ள ஏனைய தெளிவுபடுத்தல்கள் குறிப்புக்களைக் கொண்ட லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிட்ரெட்டின் இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகள் எம்மால் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 2. நிதிக்கூற்றுகள் தொடர்பிலான முகாமைத்துவத்தின் பொறுப்பு

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தாபனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக இந்த நிதிக்கூற்றுகளை தயாரிக்கும் மற்றும் நியாயமான வகையில் சமர்ப்பிக்கும் பொறுப்பு முகாமைத்துவத்திற்கு உண்டு. அத்துடன் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படு கின்ற பொருண்மையான பிறள்கூற்றுக்களின்றி நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கவும் நியாயமான வகையில் சமர்ப்பிக்கவும் ஏற்புடைய உள்ளக கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் பேணிவருதல், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்தல் மற்றும் ஏற்புடைய நிலைமைகளின் கீழ் நியாயமான கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல் என்பவை இப்பொறுப்பில் அடங்கும்.

## 3. கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்தை வெளியிடுவதிலான அடிப்படை

எமது கணக்காய்வினை அடிப்படையாகக்கொண்டு இந்த நிதிக்கூற்றுகள் சம்பந்தமாக எமது அபிப்பிராயத்தை தெரிவிப்பதே எமது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக எமது கணக்காய்வினை மேற்கொண்டோம். நிதிக் கூற்றுகள் பொருண்மையில் பிறள்கூற்றுக்கள் அற்றனவா என்பது தொடர்பில் நியாயமான சான்றுரையைப் பெரும்பொருட்டு கணக்காய்வினைத் திட்டமிட வேண்டியது இந்த நியமங்களுக்கிணங்க அவசியமாகின்றது.

நிதிக்கூற்றுக்களில் அடங்கிய காசுப்பாய்வு மற்றும் வெளிப்படுத்தல்களை உறுதி செய்கின்ற பரிசோதனை அடிப்படைச் சான்றுகளை பரிசீலித்தல் கணக்காய்வில்

அடங்குகின்றது. அத்துடன் பிரயோகிக்கப்பட்ட கோட்பாடுகள் மற்றும் முகாமைத் துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான மதிப்பீடுகளை மதிப்பீடு செய்தல் அத்துடன் ஒட்டுமொத்த நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுதலை மதிப்பீடு செய்தலும் கணக்காய்வில் அடங்குகின்றது.

கீழே பந்தி **(4)** இல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நீங்கலாக கணக்காய்வு நோக்கத்திற்குத் தேவையான அனைத்துவிதமான தகவல்களையம் தெளிவுபடுத்தல்களையும் எமது நம்பிக்கைக்கும் அறிவுக்கும் எட்டியவரை நாங்கள் பெற்றுக் கொண்டோம்.

எனவே எமது அபிப்பிராயத்திற்கு நியாயமான அடிப்படையை எமது கணக்காய்வு வழங்குகின்றதென நாங்கள் நம்புகிறோம்.

(4) 2013 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூ. 19,977,022.68 ஆக அமைந்த நிர்வாகக் கட்டணக் கடன்படுநர்களின் - இலங்கை விமானப்படை மற்றும் பொலிஸ்- திட்பநுட்பத்தன்மையைப் பெறுவதற்கான நேரடியான உறுதிப்படுத்தல்கள் கிடைத்திருக்கவில்லை.

## (5). அபிப்பிராயம்

எமது அபிப்பிராயத்திற்கிணங்க எமது விசாரணைகளுக்கிணங்க புலப்படுகின்ற வகையில் மேலே **(4)** ஆந் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் மற்றும் அதன் மூலமாகத் தோன்றுகின்ற ஏதேனும் இடைநேர்விளைவான சீராக்கல்கள் நீங்கலாக, கம்பெனியால் **2013** மார்ச் **31** இல் முடிவடைந்த ஆண்டுக்கான முறையான கணக்கறிக்கைகள் பேணப்பட்டு வந்துள்ளதோடு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தாபனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் **2013** மார்ச் **31** இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் மூலமாக கம்பெனியின் செயற்பாடுகள் தொடர்பாகவும் அத்தேதியில் முடிவுற்ற ஆண்டுக்கான அதன் இலாபம் மற்றும் காசுப்பாய்வு தொடர்பான உண்மையானதும் நியாய மானதுமான அபிப்பிராயமொன்றைத் தருகின்றது.

## (6). பிற சட்டபூர்வ மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

இந்த நிதிக்கூற்றுகள் **2007** இன் **07** ஆம் இலக்கமுடைய கம்பெனிகள் சட்டத்தின் **151 (2)** பிரிவின் அவசியப்பாடுகளுடன் அமைந்தொழுகுகின்றன.

பி. ஆர். த சில்வா அன்ட் கம்பெனி
பட்டயக் கணக்காய்வாளர்கள்,
கொழும்பு - 05.
திகதி : 2013.09-26.

**<u>லங்கா லொஜிஸ்ரிக் அன்ட் ரெக்னொலொஜீஸ் லிமிரெட்</u>**
**<u>விரிவான வருமானக் கூற்று</u>**
<u>2013 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது</u>

| | குறிப்பு | 2013<br>ரூ. சதம் | 2012<br>ரூ. |
|---|---|---|---|
| வருமானம் | (3) | 133,102,465.60 | 69,969,634 |
| விற்பனைக் கிரயம் | | (30,939,078.00) | (504,915) |
| மொத்த இலாபம் | | 102,163,387.60 | 69,464,719 |
| பிற தொழிற்பாட்டு வருமானம் | (4) | 314,816.00 | 1,477 |
| | | 102,478,203.60 | 69,466,196 |
| நிர்வாகச் செலவு | | (88,663,935.94) | (65,183,566) |
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலான இலாபம் | (5) | 13,814,267.66 | 4,282,630 |
| நிதிசார் கிரயம் | (6) | (3,007,300.00) | (2,181,656) |
| நிதிசார் வருமானம் | (7) | 6,573,198.84) | 5,521, 403 |
| வரி வதிப்புக்கு முந்திய இலாபம் | | 17,380,166.50 | 7,622,377 |
| வருமான வரிச் செலவு | (8) | (3,234,532.00) | (2,912,766) |
| ஆண்டுக்கான இலாபம்ව | | 14,145,634.50 | 4,709,611 |
| சேர்க்க: பிற விரிவான வருமானம் | | - | - |
| மொத்த விரிவான வருமானம | | 14,145,634.50 | 4,709,611 |
| பங்கொன்றுக்கான ஈட்டல் | (9) | 69,003.10 | 22,974 |

இலக்கம் (05) தொடக்கம் (18) வரை உள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக்கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பகுதியாக அமையும்.

**லங்கா லொஜிஸ்ரிக் அன்ட் ரெக்னொலொஜீஸ் லிமிரெட்**
**விரிவான வருமானக் கூற்று**
2013 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்புகள் | 2013 | 2012 | 2011.04.01 ஆந் திகதி |
|---|---|---|---|---|
| | | ரூ. சதம் | ரூ. | ரூ. |
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | |
| ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி | (11) | 9,881,573.01 | 12,871,350 | 4,030,340 |
| நடைபெறும் வேலைகள்-**ESB** முறைமை | | - | 2,104,764 | - |
| அருவச் சொத்துக்கள் | (12) | 2,104,763,.64 | - | - |
| பிற்போடப்பட்ட சொத்துக்கள் | (13) | 541,627.00 | 503,274 | 1,435,480 |
| | | 12,527,963.65 | 15,479,388 | 5,465,820 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| நடைபெறும் வேலைகள -**Para Gear-USA** | | - | 28,823,455 | - |
| முதலீடுகள் | (14) | 79,742,681.92 | 40,952,353 | 72,883,768 |
| வுர்த்தக மற்றம் பிற பெறுகைகள் | (15) | 76,754,878.14 | 120,053,634 | 53,291,716 |
| வருமதியான வருமான வரி | (16) | 2,527,196.70 | 4,579,871 | 6,330,076 |
| காசும் காசுக்கு சமமானவையும் | (17) | 65,910.00 | 55,188 | 110,909 |
| | | 159,090,666.76 | 194,464,501 | 132,616,469 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 171,618,630.41 | 209,943,889 | 138,082,289 |
| **உரிமைப் பங்குகளும் பொறுப்புக்களும்** | | | | |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | | | |
| வேளிப்படுத்திய மூலதனம் | (18) | 2,050 | 2,050 | 2,050 |
| தொடக்க மூலதனம் | (19) | 100,000,000.00 | 100,000,000 | 100,000,000 |
| தடுத்துவைத்த ஈட்டல்கள் | | 19,389,877.85 | 6,970,606 | 2,058,426 |
| **மொத்த உரிமைப் பங்குகள்** | | 119,391,927.85 | 106,972,656 | 102,060,476 |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | | | |
| ஊழியர் நன்மைக் கடப்பாடுகள் | (20) | 4,082,916.00 | 19,303,408 | 2,192,650 |
| பருவக்கடன் | | - | 15,800,000 | - |
| | | 4,082,916.00 | 19,303,408 | 2,192,650 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | | |
| வர்த்தக மற்றும் பிற சென்மதிகள் | (22) | 40,341,414.76 | 46,089,690 | 22,657,327 |
| வங்கி மேலதிகப்பற்று | | 7,802,371.80 | 37,578,135 | 11,171,836 |
| | | 48,143,786.56 | 83,667,826 | 33,829,163 |
| **மொத்த உரிமைப் பங்குகளும் பொறுப்புக்களும்** | | 171,618,630.41 | 209,943,889 | 138,082,289 |

இந்த நிதிக் கூற்றுகள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் அமைந்தொழுகுகின்றன.

நிதித் தலைமையதிகாரி

இந்த நிதிக் கூற்றினைத் தயாரித்தல் சம்பந்தமாக பணிப்பாளர் சபை பொருப்பு வகிக்கின்றது. பணிப்பாளர் சபைக்காகவும் அதன் சார்பாகவும் கையொப்பமிட்டது,

| | பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| பணிப்பாளர்கள் : | 1. நிமல் பெரேரா | .............................................. |
| | 2. எஸ். சேனாரத்ன | ............................................... |

பணிப்பாளர் சபையினால்
அங்கீகரிக்கப்பட்ட திகதி 2013.11.24

இலக்கம் (05) தொடக்கம் (18) வரை உள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக்கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பகுதியாக அமையும்.

**லங்கா லொஜிஸ்ரிக் அன்ட் ரெக்னொலொஜீஸ் லிமிரெட்**
**உரிமை மாற்றம் பற்றிய கூற்று**
2013 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | *வெளிப்படுத்திய மூலதனம் ரூ.சதம்* | *தொடக்க மூலதனம் ரூ.சதம்* | *தடுத்துவைத்த ஈட்டல்கள் ரூ.சதம்* | *கூட்டுத்தொகை ரூ.சதம்* |
|---|---|---|---|---|
| **2011 மார்ச் 31 இல் மீதி** | 2,050.00 | 100,000,000.00 | 945,171.42 | 100,947,221.42 |
| புதிய கணக்கீட்டு நியமங்களை பிரயோகித்ததன் தாக்கம் | - | - | 1,113255.00 | 1,113,255.00 |
| | 2,050.00 | 100,000,000.00 | 2,058,426.42 | 102,060,476.42 |
| **2011 ஏப்றில் 30 இல் மீதி** | | | | |
| முந்திய வருடத்திற்கான சீராக்கம் | - | - | 202,569.40 | 202,569.40 |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | 4,709,610.53 | 4,709,610.53 |
| | 2,050.00 | 100,000,000.00 | 6,970,606.35 | 106,972,656.35 |
| **2012 மார்ச் 31 இல் மீதி** | | | | |
| முந்திய வருடத்திற்கான சீராக்கம் | - | - | (1,726,363.00) | (1,726,363.00) |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | 14,145,634.50 | 14,145,634.50 |
| | 2,050.00 | 100,000,000.00 | 19,389,877.85 | 119,391,927.85 |
| **2013 மார்ச் 31 இல் மீதி** | | | | |

இலக்கம் (05) தொடக்கம் (18) வரை உள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக்கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பகுதியாக அமையும்.

**லங்கா லொஜிஸ்ரிக் அன்ட் ரெக்னொலொஜீஸ் லிமிரெட்**
**காசுப் பாய்வுக் கூற்று**
2013 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | 2013<br>ரூ. | 2012<br>ரூ. |
|---|---|---|
| **நெறிப்படுத்தல் நடவடிக்கைகளிலான காசுப் பாய்வு** | | |
| வருமான வரிச் செலவுகளக்கு முந்திய தேறிய இலாபம் | 17,380,167 | 7,622,377 |
| **சீராக்கல்கள்** | | |
| முந்திய ஆண்டுக்கான சீராக்கங்கள் | (1,726,363) | 287,,251 |
| தேய்மானம் | 5,252,831 | 4,786,115 |
| நிதிசார் கிரயம் | 3,007,300 | 2,181,656 |
| குறித்துரைத்த நன்மைத் திட்டங்களுக்கான ஏற்பாடுகள் | 579,508 | 1,310,758 |
| கிடைத்த வட்டி | (6,573,199) | (5,521,403) |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம் /(நட்டம்) | 17,920,244 | 10,666,754 |
| வர்த்தக மற்றும் பிற வருமதிகள் (அதிகரிப்பு) / வீழ்ச்சி | 72,122,212 | (95,585,374) |
| வர்த்தக மற்றும் பிற சென்மதிகளின் அதிகரிப்பு / (வீழ்ச்சி) | (5,748,275) | 23,432,361 |
| தொழிற்பாடுகளிலிருந்து பிறப்பித்த காசு | 84,294,181 | (61,486,260) |
| செலுத்தப்பட்ட நிதியச் செலவுகள் | (3,007,300) | (2,18,656) |
| மீளச்செலுத்தப்பட்ட வருமான வரி | - | 464,390 |
| செலுத்தப்பட்ட வருமான வரி | - | (48,088) |
| செலுத்தப்பட்ட பொ.சே. வரி | (561,578) | - |
| செலுத்தப்பட்ட தடுத்துவைத்தல் வரி | (658,633) | (650,772) |
| தே.பா.வரி | - | (80,565) |
| நெறிப்படுத்தல் நடவடிக்கைகளிலான தேறிய காசு | 80,066,670 | 63,982,952 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலான தேறிய காசுப் பாய்வு | | |
| ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளைக் கொள்ளல் | (2,263,055) | (15,731,888) |
| கிடைத்த வட்டி | 6,573,199 | 5,521,404 |
| முதலீடுகளைக்கொள்ளல்/முதலீடுகளைக் கையுதிர்த்தல் | (38,790,329) | 31,931,416 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலான தேறிய காசுப் பாய்வு | (34,480,185) | 21,720,932 |
| **நிதிசார் நடவடிக்கைகளிலான காசுப் பாய்வு** | | |
| கிடைத்த கடன் | - | 15,800,000 |
| கடன் மீளச் செலுத்துதல் | (15,800,000) | - |
| நிதிசார் நடவடிக்கைகளிலான தேறிய காசுப் பாய்வு | (15,800,000) | 15,800,000 |
| **காசும் காசுக்கு சமமானவற்றினதும் நிகர அதிகரிப்பு / (வீழ்ச்சி)** | 29,786,485 | (26,462,020) |
| **ஆண்டின் தொடக்கத்தில் காசும் காசுக்கு சமமானவையும்** | (37,522,947) | (11,060,927) |
| **ஆண்டின் இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும்** | (7,736,462) | (37,522,947) |
| **காசும் காசுக்கு சமமானவையினதும் பகுப்பாய்வு** | | |
| வங்கியில் உள்ள காசு - (மேலதிகப் பற்று) | (7,802,372) | (37,578,135) |
| வங்கியில் உள்ள காசு –க.இ.5960160 | 11,740 | 938 |
| சம்பத் வங்கி- நடைமுறைக் கணக்கு | 24,170 | 24,250 |
| கையில் உள்ள காசு | 30,000 | 30,000 |
| | (7,736,462) | (37,522,947) |

இலக்கம் (05) தொடக்கம் (18) வரை உள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக்கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பகுதியாக அமையும்.

**லங்கா லொஜிஸ்ரிக் அன்ட் ரெக்னொலொஜீஸ் லிமிரெட்**
2013 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

## 1. தாபனம்சார் தகவல்கள்

### 1.1 பொதுவானவை

2013 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான கம்பெனியின் நிதிக்கூற்றக்களை வெளியிடுவதற்காக 2013 செப்தெம்பர் 24 திகதி பணிப்பாளர் சபைக்கு பிரேரணை முன்வைக்கப்பட்டு வழிமொழியப்பட்டு அதிகாரம் கையளிக்கப்பட்டது. லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட் கம்பெனி ('கம்பெனி') இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட மற்றும் நிரந்தர வதிவு கொண்ட வரையறுக்கப் பட்ட பொறுப்புடைய கம்பெனியாகும். கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கொழும்பு - 7, பௌத்தாலோக மாவத்த, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் 4 - 205 இல் தாபிக்கப் பட்டுள்ளதோடு பிரதான தொழில்முயற்சி நிலையமும் அங்கேயே அமைந்துள்ளது.

### 1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை

தரைப்படை, கடற்படை, விமானப்படை மற்றும் பொலீசுக்கான உபகரணங் களையும் சேவைகளையும் வழங்குவதே ஆண்டில் கம்பெனியின் பிரதான செயற்பாடாக அமைந்தது. அத்துடன் பாதுகாப்பு அமைச்சின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நோக்கங்களுக்கான பணடங்களையும் சேவைகளையும் வழங்குவதாகும்.

**1.3** பக்கம் (5) தொடக்கம் (18) வரையில் உள்ள நிதிக்கூற்றுகள் பற்றிய குறிப்புகள் நிதிக்கூற்றுக்களின் இன்றியமையாத பகுதியாகும்.

1.4 ஆண்டிறுதியில் பதவியணி எண்ணிக்கை 43 ஆக விளங்கியது.

## 2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

### 2.1 பொதுவான கொள்கைகள்

#### 2.1.1 தயாரித்தலுக்கான அடிப்படை

2012 மார்ச் 31 ஆம் தேதியில் கம்பெனியின் நிதி நிலைமை பற்றிய கூற்று, விரிவான வருமானம், உரிமைப்பங்கிலான மாற்றம் மற்றும் காசுப் பாய்வுக்கூற்றுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் (" நிதிக்கூற்றுக்கள்" ) சிறிய மற்றம் நடுத்தர அளவிலான வாபனங்களக்க ஏற்புடைத்தாகின்ற இலங்கையின் நிதிசார் அறிக்கையிடல் நியமங்களுடன் இயலுமான எல்லாவிதத்திலும் அமைந்தொழுகுகின்றன.

இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்நிதிக்கூற்றுகள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2012 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்காகவும் அதனை உள்ளடக்கிய அனைத்தக் காலப்பகுதிகளுக்காகவும் கம்பெனியானது 2012 மார்ச் 31 வரை அமுலில் இருந்த இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.க.நி.) அமைவாகவே தனது நிதி அறிக்கைகளைத் தயாரித்துள்ளது. 2013 மார்ச 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இந்நிதிக் கூற்றுக்கள் சி.ந.தாபனங்களுக்கான இ.நி.அ.நியமங்களை கம்பெனி பிரயோகித்து தயாரித்த முதலாவது நிதிக்கூற்று ஆகும். சி.ந..தாபனங்களுக்கான இ.நி.அ.நியமங்களை கம்பெனி பிரயோகித்த விதம் பற்றிய விபரங்களுக்காக குறிப்பு (10) ஐப் பாரக்கவும்.

நிதிச் சாதனம் தவிர்ந்ததாக இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுக்கிரய மரபின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நடப்புத்தொழில்முயற்சி என்றவகையில் இடையறாமல் நிலவுவதற்கு கம்பெனி கொண்டுள்ள இயலுமை பற்றி பணிப்பாளர் சபை மதிப்பீடொன் றைச் செய்துள்ளதோடு கலைக்கவோ வர்த்தகச் செயற்பாடுகளை நிறுத்தவோ அவர்கள் கருதுவதில்லை.

### 2.1.2 ஒப்பீட்டு ரீதியான தகவல்கள்

கம்பெனியால் கணக்கீட்டுக்கொள்கைகள் தொடர்ச்சியாக பிரதியீடு செய்யப் பட்டுள்ளதோடு அவை முந்திய ஆள்டுக்காக பிரயோகித்த கொள்கைகளடன் நேரொத்ததாகவும் அமைகின்றன.

### 2.1.3 வெளிநாட்டுப் புழக்கத்திலுள்ள பணக்கொடுக்கல் - வாங்கல்

